[2003 நவம்பர் 5

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல கலந்தாய்வு மூலமாக பணியிடங்கள் நிரப்பப்படுவதில் காலதாமதம் ஏற்படும் என்று சொன்னால், அவர் விருப்பப்படி நிர்வாக மாற்றத்தின் அடிப்படையில் அந்தப் பணியிடங்கள் விரைவாக நிரப்பப்பட்டுவிடும்.

(ஆ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் மற்றும் நியாய விலைக் கடைகளை யானைகள் சேதப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் மற்றும் நுகர்வோர் நியாயவிலைக் கடைகளை யானைகள் அடிக்கடி சேதப்படுத்துவதால் பொதுமக்களின் உயிருக்கு ஏற்படும் ஆபத்து" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

வால்பாறை பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு காபி, தேயிலை போன்ற தோட்டப் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டு அதன் மூலம் பெறும் வேலை வாய்ப்புக்காக தரையிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வால்பாறை மலைப்பகுதியில் குடியேறுவது 1930 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது சுமார் 2,50,000 மக்கள் தோட்டங்களை நம்பி இங்கு குடியேறியுள்ளது மட்டுமல்லாமல், வெளியூர்களிலிருந்தும் காபி, பழங்கள் முதிர்ச்சியடையும் காலத்தில் பறிப்பதற்காக வந்து செல்கின்றனர். 1960-க்குப் பின் இப்பகுதியில் மேல் நீரார், கீழ் நீரார், சோலையாறு, காடம்பாறை போன்ற அணைகள் கட்டப்பட்டதாலும், இப்பகுதியில்

2003 நவம்பர் 5] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

யானைகள் சுதந்திரமாக இடம் பெயர முடியாத நிலை உள்ளது. மேலும் குடியிருப்புப் பகுதிகளில் யானைக்கு விருப்ப உணவான வாழை முதலிய பயிர்களும், தேயிலைத் தோட்ட சதுப்புப் பகுதிகளில் தீவனப் பயிரான கவுதிமாலா புல்லும் விளைவிக்கப்படுவது யானைகளைக் கவர்ந்திழுப்பதாக உள்ளது. மேலும் யானைகள் செல்லும் வழித் தடங்களின் அருகில் அரிசி, சர்க்கரை, உப்பு போன்ற உணவுப் பொருட்கள் பெரிய பாதுகாப்பின்றி வைக்கப்படுவதும் யானைகளைக் கவர்வதாக உள்ளது. இவ்வாறு யானை வழித் தடங்களின் அழிவும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் தோட்டப் பயிர்கள் வளர்த்தல் போன்ற காரணங்களால் வால்பாறை பகுதிகளில் யானைகள்—மனிதர்கள் இடையில் மோதல்கள் நிகழ்கின்றன.

2. வால்பாறை பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ள சுமார் 50 எஸ்டேட் பகுதிகளில் ரேசன் கடைகள் மற்றும் சத்துணவு மையங்களில் வைக்கப்பட்டிருக்கும் அரிசியிலிருந்து ஈரப்பதமான காற்றினால் வருகின்ற ஒருவிதமான வாடையானது காட்டு யானைகளை அரிசி சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு கவர்ந்திழுப்பதால் யானைகள் மேற்படி எஸ்டேட் பகுதியில் உள்ள சில ரேசன் கடைகளை மற்றும் சத்துணவு மையங்களை சிறிது சேதப்படுத்தியுள்ளன. இவ்வாறு காட்டு யானைகள் சேதப்படுத்தும் குடியிருப்புப் பகுதிகளுக்கும், ரேசன் கடைகளுக்கும் பெரும்பாலும் மண் சுவர் மற்றும் தகரங்கள் வேயப்பட்ட கூரைகளையே கொண்டுள்ளதால் எளிதாக சேதத்திற்குள்ளாகின்றன. கடந்த ஒரு மாத காலத்தில் 8 நிகழ்வுகளில் குடியிருப்புகள், சத்துணவுக் கூடங்கள், ரேசன் கடைகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை அரிசி, சர்க்கரை, உப்பு போன்ற உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்ட இடங்களாகும்.

3. வால்பாறை பகுதிகளில் வருடந்தோறும் அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை யானைகள் இடம் பெயர்வது வழக்கம். காட்டு யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்கு வரும்போது அவற்றை விரட்டியடிக்க வன உயிரினங்களைக் கையாளுவதில் அனுபவம் மற்றும் சாதுரியமிக்க சரகர், வனவர், வனக் காப்பாளர், வனக் காவலர், யானை காவடி, மாவுத்தன் மற்றும் வேட்டைத் தடுப்பு முகாமில் பணியாற்றும் மலை மக்களைக் கொண்டு சிறப்பு அதிரடி நடவடிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவினர் உடன் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று, துரிதமான நடவடிக்கை

மேற்கொண்டு, பொது, மக்களுக்கு உயிர் சேதம், பொருட் சேதம் ஏதும் ஏற்படாமல் தடுக்கின்றனர். காட்டு யானைகள், வனத் துறை யானைகள் (கும்கி யானைகள்) மூலம் காட்டுக்குள் திருப்பியனுப்பப்படுகின்றன.

4. காட்டு யானைகளால் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டு எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளில் வாழை மற்றும் காய்கறித் தோட்டங்கள் அமைப்பதைத் தவிர்க்கும்படி தக்க அறிவுரைகளை வழங்குமாறு எஸ்டேட் நிர்வாகத்திற்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. குடியிருப்புப் பகுதிகளுக்கு யானைகள் போன்ற வன உயிரினங்கள் வந்தால் உடனடியாக அருகில் உள்ள வனத் துறை பணியாளர்களுக்கும், வன உயிரினக் காப்பாளர்களுக்கும் தகவல் தெரிவிக்கவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

5. யானைகள் தொன்றுதொட்டு ஒரே பாதையில் செல்லும் பழக்கமுள்ளவை. எனவே அவை பாதைகளை மாற்றிக் கொள்வதில்லை. தனியார் எஸ்டேட் மற்றும் தனியார் காடுகள் 200 ச.கி.மீ. பரப்பில் உள்ளதால் அவை அனைத்திற்கும் அரசு செலவில் மின்சார வேலியோ, யானைத் தடுப்புக் குழிகளோ அமைப்பது என்பது சாத்தியமானதாக இல்லை. எனவே, தனியார் எஸ்டேட் நிறுவனத்தினர் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி சூரிய சக்தியில் இயங்கும் மின்சார வேலி அமைத்தும், யானைத் தடுப்புக் குழிகள் அமைத்தும் சேதங்களைத் தவிர்க்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

6. இதற்கப்பாற்பட்டு வன உயிரினங்களின் தாக்குதலால் மரணமடையும் நபரது குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், யானைகள் வளர்ப்புத் திட்டம் மற்றும் புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகிய தலைப்புகளில் வழங்கப்பட்டு வருகிறது.

7. வனத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட சீரிய முயற்சிகள் காரணமாக 2000-2001-ல் 5 ஆக இருந்த யானைகளால் ஆன உயிரிழப்பு, 2001-2002-ல் 2 ஆகவும், 2002-2003-ல் 1 ஆகவும் குறைந்துள்ளது. மேலும், 2003-2004-ல் 31-10-2003 முடிய உயிரிழப்பு ஏதும் இல்லை என்னும் நிலைக்கு வந்துள்ளது.

8. முடிவாக யானைகளின் சொந்த வீடான காட்டிற்குள் மக்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு பொறுப்புடன் செயல்பட்டால் பெரும்பாலான உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்களைத் தவிர்க்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS

2003 நவம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், ஒரு கேள்வி கேளுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் இஞ்சிப்பாறை, ஸ்டான்மோட், தோணிமுடி, சவரங்காடு, மாணிக்க என்.சி., தாய்முடி என்.சி., பச்சைமலை, வெள்ளைமலை, அப்பர் பரணி, வாட்டர் பால்ஸ், கஜமுடி, காஞ்சமலை, நல்லகாத்து, ஹைபாரஸ்ட், கருமலை, ஊசிமலை, சிறுகுந்தா போன்ற பகுதிகளிலுள்ள எஸ்டேட் பகுதிகளில் வீடுகளையும், சத்துணவுக் கூடங்களையும், பள்ளிக்கூடங்களில் உள்ள சில வகுப்பறைகளையும் யானைகள் தொடர்ந்து இடித்து வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அறிக்கையில் உள்ளபடி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேயிலைத் தோட்ட நிர்வாகத்திடம் கூறி, மின் வேலி போடவும், அதேசமயத்தில் யானைத் தடுப்புக் குழி அமைக்கவும், நிர்வாகத்தை வற்புறுத்தி, அங்கேயிருக்கிற மக்களை பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் தொன்றுதொட்டு ஒரே பாதையில் செல்லும் பழக்கம் உள்ளவை. தனியார் எஸ்டேட்கள் 200 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளதால், அவை அனைத்திற்கும் அரசு செலவில் மின்சார வேலியோ, யானைத் தடுப்புக் குழிகளோ அமைப்பது என்பது சாத்தியமானதாக இல்லை. எனவே, தனியார் எஸ்டேட் நிறுவனத்தினர் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி, சூரிய சக்தியால் இயங்கும் மின்சார வேலி அமைத்தும், யானைத் தடுப்புக் குழிகள் அமைத்தும் சேதங்களைத் தவிர்க்க வனத் துறையினர் மூலமாக கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இதற்கு அப்பாற்பட்டு, வன விலங்குகளால் தாக்கப்பட்டு மரணம் அடையும் நபரது குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்த வருடம் எந்தவிதமான இழப்பும் ஏற்படவில்லை. வனத் துறை, யானைகள் வராமல் தடுப்பதற்கு, வனத் துறை யானைகள் மூலமாக காட்டு யானைகளை விரட்டி மக்களைப் பாதுகாத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.